**செ. கு. எண்: 070** **நாள்: 06.05.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K .பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.5.2018

இன்று **(6.5.2018)** நடைபெற்ற நீட் தேர்விற்கு கேரள மாநிலம் எர்ணாகுளத்திற்கு தனது மகன் கஸ்தூரி மகாலிங்கத்தை அழைத்துச் சென்று, விடுதியில் தங்கியிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த திரு.கிருஷ்ணசாமி அவர்களின் மனைவி திருமதி. பாரதி மகாதேவி அவர்களை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டேன்.

அப்போது திருமதி. பாரதி மகாதேவி அவர்கள் தனது மகன் கஸ்தூரி மகாலிங்கத்தின் மேற்படிப்புச் செலவுகளுக்கு உதவிடுமாறு கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையினை ஏற்று, மாணவன் கஸ்தூரி மகாலிங்கத்தின் கல்விச் செலவுகளை தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவித்தேன். இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**